வடகிழக்கு பருவமழை தீவிரம்!

தமிழகத்தில் 5 நாட்கள் கனமழை நீடிக்கும்!

சென்னை உள்பட 11 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

சென்னை, அக்.21-

வட தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இந்த சுழற்சியில் இருந்து வட மேற்கு வங்கக் கடல் பகுதிகள் வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் இரவில் மழை பெய்கிறது. மேலும் 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் அதனை யொட்டிய மாவட்டங்களில் கனமழையும் இன்று பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் ஆகிய 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.திருச்சி, அரியலூர், பெரம்பலூர், ராணிப் பேட்டை, வேலூர், திருப் பத்தூர், தேனி, திண்டுக்கல். மதுரை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி. மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று (21-ந்தேதி) தென் காசி, விருதுநகர், திரு நெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகனமழை (ரெட் அலர்ட்) பெய்ய வாய்ப்பு உள்ளது. புதுக்கோட்டை. தஞ்சாவூர், திருவாரூர். நாகப்பட்டினம், மயிலாடு துறை, மதுரை, திண்டுக்கல். தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

22-ந்தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும். 23-ந் தேதி நீலகிரி, கோவை, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் மதுரை ஓரிரு மாவட்டங்களில் இடங்களில் கனமழையும் ஏனைய மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

24 மற்றும் 25-ந்தேதியில் நீலகிரி,கோவை,திருப்பூர், தேனி, மதுரை, ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி. அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப் பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில் தென் மேற்கு அரபிக் கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று உருவானது.

காலை 5.30 மணி நிலவரப்படி அந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. கடந்த 12 மணி நேரத்தில் மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து நேற்று காலை அதே இடத்தில் நீடிக்கிறது. இது அடுத்த 12 மணி நேரத்திற்கு தனது தீவிரத்தை தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்து மேற்கு வட மேற்கு திசையில் நகரக் கூடும்.

அதனைத் தொடர்ந்து இன்று (21-ந் தேதி) வரை மேற்கு வடமேற்கு திசையிலும் 22-ந் தேதி நாளை சோமாலியா கடற்கரை நோக்கி மேற்கு தென் மேற்கு திசையிலும் நகர வாய்ப்பு உள்ளது என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் விஞ்ஞானி வி.ஆர். துரை தெரிவித்து உள்ளார்.

அவர் மேலும் கூறிய தாவது:-

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்திற்கு எந்த க்கமும் ஏற்படாது. தென்மேற்கு அரபிக் கடலிலும் சோகத்ரா தீவை சுற்றியுள்ள பகுதிகளிலும் சோமாலியா கடற்கரை பகுதிகளிலும் கடல் சீற்றத்துடன் காணப்படும்.


எனவே மீனவர்கள் 22 -ந் தேதி வரை அந்தப் பகுதிக ளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. வருகிற 24-ந்தேதி வாக்கில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி 1 உருவாகக் கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வளைகுடா நாடான பக்ரைன் நாட்டில்

தி.மு.க. அயலக தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் (NRTIA) சார்பில் முப்பெரும் விழா!

முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!



பக்ரைன், அக். 21-

வளைகுடா நாடான பக்ரைன் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அயலக தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் (NRTIA) சார்பில் முப்பெரும் விழா 16.10.2026 வெள்ளிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

மேனாள் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை மற்றும் விளையாட்டு மற்றும் சுற்று சூழல் துறை அமைச்சரும் ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான சிவ.வீ.மெய்யநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழா பேருரை நிகழ்த்தினார். NRTIA பகரைன் பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் முன்னிலையில், துணை அமைப்பாளர் எருச்சி ரவிச்சந்திரன் தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது. துணை அமைப்பாளர் சுல்தான் இப்ராகீம் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார்.

ஏராளமானோர் கலந்து கொண்ட விழாவில் பெரியார், அண்ணா, கலைஞர் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

சுற்று சூழல் ஆர்வலரான சிவ.வீ.மெய்யநாதன் வருகை நினைவாக மரக்கன்று நடப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கப் பட்டது. நிகழ்வில் கணேஷ் ரெஜீனா அபு, ஆசிரியை ஆயிஷா, சரண்யா, செல்வி நஜ்வா ஆகிய ஐந்து இளம் மகளிர் திராவிட மாடல் ஆட்சியையும் தமிழகத்தின் இன்றைய நிலையையும் ஒப்பிட்டு சிறப்பான வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் பேசிய முன்னாள் அமைச்சரும், ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினருமான சிவ.வீ மெய்யநாதன் கடந்த திராவிட மாடல் ஆட்சியில், தி.மு.க. செய்த சாதனைகளை பட்டியலிட்டு பேசினார். தலைநகர் சென்னையில் திமுக அரசுமாசுக் கட்டுப்பாட்டை குறைத்தது பற்றியும்

கிராமப் புறங்களில் குறுங்காடுகள் அமைத்து லட்சக்கணக்கில் மரங்கன்றுகள் நடப்பட்டதையும் குறிப்பிட்டு பேசினார்.

பரந்தூரில் அமைய விருந்த விமான நிலையத் திட்டம் கைவிடப் பட்டதும் அதனால் எதிர்காலத்தில் தமிழ்நாடு எவ்வளவு பின்னடவைச் சந்திக்கும் என்று கவலையுடன் சுட்டிக் காட்டினார்.

கல்விக்காக திமுக செய்த திட்டம், நான் முதல்வன் திட்டத்தால் மாணவர்கள் பெற்ற பலன்களையும், பெண் கள சுயமரியாதை யுடன் வாழ மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் ஆகியவற்றால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும்,

தி.மு.க. ஆட்சியில், தொழில் துறையில் தமிழ் நாடு அடைந்த முன்னேற்றம் பற்றி பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் மற்றும் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ. மெய்ய நாதன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2026 முப்பெரும் விழா தலைமை விருது திருச்சி ரவிச்சந்திரனுக்கும், பெரியார் விருது துணை அமைப்பாளர் கபீர் அகமதுக்கும்,

தலைவர் கலைஞர் விருது ஆலோசனைக் குழு உறுப்பினர் நாஞ்சில் பஷீருக்கும், பேராசிரியர் க. அன்பழகன் விருது அவைத் தலைவர் திருச்சி சு.முபாரக்குக்கும்,

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் விருது துணைத் தலைவர் குடந்தை ஆரிப்க்கும்,

பாவேந்தர் விருது ஆலோசனைக் குழு துணைத் தலைவர் தக்கலை சாம்க்கும்,

முரசொலி செல்வம் அவர்களின் விருது செயற் குழு உறுப்பினர் மு.சிதம் பரத்திற்கும் வழங்கப் பட்டது.

நானூருக்கும் மேற் பட்ட திமுக தொண்டர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹாஜா தொகுத்து வழங்க, மக்கள் தொடர்புச் செயலாளர் ஸ்ரீதர் சிவா வரவேற்புரையாற்ற, பொதுச் செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் நன்றியுரை கூறினார்.

விழா முடிவில் பல இளைஞர்கள் மேனாள் அமைச்சர் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

ஆர்.டி.சேகர் தலைமை! மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர்

பெரம்பூர் த.ஆறுமுகம் இல்ல மணவிழா வரவேற்பு!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 21 -

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர் - பெரம்பூர் 44வது வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் - ஆ.இராஜலட்சுமி ஆகியோரின் புதல்வி ஆ.தமிழ் பொன்னிக்கும் சென்னை கோடம்பாக்கம் வி.குமார் - கே.ரமாதேவி ஆகியோரின் புதல்வர் கே.விக்னேஷ்க்கும்



இம்மணவிழா வரவேற்பு 24.10.2026 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மூலக்கடை ஜங்ஷனில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம், தா.இளைய அருணா, பி.டி.சி. ஜி.செல்வராஜ், பி.டி.சி.வெ.பாலு, க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.நரேந்திரன், இரா. கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், டி.கமலக்கண்ணன், அ.தமிழ்செல்வன், ப.மதிவாணன், வி.அமுலு, நா.சேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கே.என். நேரு எம்.எல்.ஏ., ஆ.இராசா எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., தா.மோ.அன்பரசன், சா.சி.சிவசங்கர், ஆவடி சா.மு.நாசர், கோவி செழியன் எம்.எல்.ஏ., இரா.கிரிராஜன் எம்.பி., எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, நே.சிற்றரசு, மயிலை த.வேலு, கனிமொழி என்.வி.என்.சோமு,புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா,

ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால், ப.ரங்கநாதன், ஜே.ஜே.எபினேசர், ஜட்ரீம் இரா.மூர்த்தி, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல், கே.பி.சங்கர், மேயர் பிரியா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் இவ்விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி.

எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில்

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (22.10.2026 - வியாழக்கிழமை) அன்று கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள பத்மாவதி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நாள்	நேரம்	தொகுதி
22.10.2026	மாலை 4.00 மணிக்கு	சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி
22.10.2026	மாலை 5.00 மணிக்கு	ஆயிரம்விளக்கு
22.10.2026	மாலை 6.00 மணிக்கு	அண்ணா நகர்

மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையிலும், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, தலைமைக் கழகப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் பேரா. ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆஸ்டின் மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் மற்றும் இன்னாள் நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு/பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக / வட்ட கழக நிர்வாகிகள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நே.சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி மிசா. கி.வேணு அவர்களின் 3 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் கி.வேணு ஆனந்த் தலைமையில் ஒன்றிய கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தலைமைக் கழகத்தில் - புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

ஊராட்சி ஒன்றிய கிராம நிர்வாகிகள் பட்டியலை ஒப்படைப்போம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, அக்.21-

புதுக்கோட்டை வடக்கு, மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 19.10.2026 திங்கள் கிழமை மதியம் 12 மணிய எவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகை கீரை தமிழ்ச்செல்வன் அவைக் கூடத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் மதுரை எஸ்.பாலா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரையாயாற்றினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன்,

பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, சு.சண்முகம், வே.ராஜேஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.பரமசிவம், என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், எம்.கோவிந்தராஜ், வை.விஜயக்குமார், இராசு.சந்தோஷ், எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் சி.குறிஞ்சிவாணன், சி.அரங்கநாயகம், புத்தாம்பூர் எம்.சுப்பையா, கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், செ.கணேஷ், மாலா ராஜேந்திர துரை, இராம.செல்வராஜ், ஜெ.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், வெற்றிச் செல்வன், மா.மணிவேலன், வடவாளம் க.செ.மணிமாறன், செ.ரமேஷ், சொ.தமிழினியன், ராயல் சபா, ஞானசேகரன், தேங்கனிப்பட்டி ராஜா, டி.தயாளன், ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் சட்ட மன்ற தேர்தலில் தனித்து நின்றாலும் திராவிட முன்னேற்ற கழகம் மக்கள் செல்வாக்கை இழக்கவில்லை என்பதை தன் செயல்திறன் மூலம் நிரூபித்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் அவருக்கு துணை நின்ற இயக்கம் காக்க போராடிய சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாவட்டச் செயற்குழு தனது நெஞ் சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது.

தொடர்ந்து வரும் இடைத்தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து அதன்மூலம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் திராவிட முன்னேற்ற கழகம் நிலைத்து நிற்கிறது என்பதை நிரூபிக்க சபதம் ஏற்க மாவட்டச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றுகிறது.

அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்கள் பட்டியலை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தேர்தல் பிரதிநிதிகளான மாநில விவசாய அணி செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் மதுரை பாலா ஆகியோர் மூலம் மாவட்ட கழகத்தின் மூலம் தலைமை கழகத்தில் 2 நாட்களுக்குள் ஒப்படைப்பது என முடிவு செய்யப்படுகிறது.

கழகத்தலைவர் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் முழு ஒத்துழைப்பு தந்து எழுச்சியோடும் சிறப்போடும் அவற்றை நடத்திட தீர்மானிக்கப்படுகிறது.